# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:83** **தேதி:-14.12.2015**

## கேடர் பெயர் மாற்றம்- போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி !

அன்பார்ந்த தோழ,ர்களே!

BSNL நிறுவனம் நஷ்டத்தில் உள்ளதாகக் கூறி பல்வேறு பொருளாதார சலுகைகளை ஊழியர்களுக்கு மறுத்து வந்த நிர்வாகம், எந்த பொருட்செலவும் இல்லாத கேடர் பெயர் மாற்றப் பிரச்னையை, தேவையின்றி தாமதம் செய்து வந்தது. இதற்கு அதிகார வர்க்க ஆணவச் சிந்தனையே காரணம். நமது பல்வேறு போராட்டங்களிலும் 27.11.2014 உள்ளிட்ட வேலைநிறுத்தங்களிலும் இக்கோரிக்கை வலியுறுத்தப் பட்டது. கேடர் பெயர் மாற்றக் குழுவின் பல கூட்டங்கள் நடத்தப் .பட்டும் தீர்வு வராமல் இருந்தது. TTA கேடருக்கு ஜூனியர் எஞ்சீனியர் என பெயர் மாற்றம் செய்ய நிர்வாகம் மறுத்தது. 28.7.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பெயர் மாற்றங்கள் இறுதிப்படுத்தப் பட்டன. நமது மத்திய சங்க பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யுவும், இதர நிர்வாகிகளும் தொடர்ந்து கார்ப்பரேட் அலுவலக அதிகாரிகளைச் சந்தித்து பெயர்மாற்றங்களை அமுல்படுத்தும்படி நிர்ப்பந்தித்து வந்தனர். SR. TOA கேடருக்கு புதிய பெயர் மாற்றத்தில் OFFICE SUPERINTENDENT என்ற திருத்தங்களையும் வலியுறுத்தினர். இறுதியாக 11.12.2015 அன்று நடந்த கூட்டத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் பின்வரும் பெயர் மாற்றங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது. ஊழியர் தரப்பில் தோழர்கள் பி. அபிமன்யு, சந்தேஷ்வர் சிங் ஆகியோர் கலந்து கொண்டனர், போராட்டங்களில் கலந்து கொண்ட அனைத்து தோழர், தோழியருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் ! பெருமுயற்சி மேற்கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழுவிற்கும், அதன் கன்வீனர் தோழர். பி. அபிமன்யுவிற்கும், பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் !

| | | |
|---|---|---|
| **SR. TOA** | **:NE 7 & 8** | **- SENIOR OFFICE ASSOCIATE** |
| | **NE 9 & 10** | **- ASSISTANT OFFICE SUPERINTENDENT** |
| | **NE 11 & 12** | **- OFFICE SUPERINTENDENT** |
| **RM** | | **- ASSISTANT TELECOM TECHNICIAN** |
| **TM** | | **- TELECOM TECHNICIAN** |
| **TTA** | | **- JUNIOR ENGINEER** |

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**